செய்தி வெளியீடு **நாள் : 31.7.2025**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் கொளத்தூர் தொகுதியிலுள்ள பெரியார் நகர் மற்றும் திரு.வி.க.நகர் பேருந்து நிலையங்கள் செப்டம்பர் மாதத்திலும், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் அக்டோபர் மாதத்திலும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும். கிளாம்பாக்கம் ரயில் நிலையம் செப்டம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று தென்னக ரயில்வே அதிகாரிகள் உறுதியளித்துள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (31.7.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் பேருந்து நிலையப் பணிகளையும் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் சேத்துப்பட்டு நவீன சலவைக் கூடம் பணிகளையும் துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முதல்வர், எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களின் சிந்தனையில் தோன்றிய 'வடசென்னை வளர்ச்சி திட்டம்' வழியாக, இதுவரை 282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் உருவான காலத்திலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு, குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கும் மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் பயன்படும் வகையில் பல்வேறு கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த வளர்ச்சிப் பணிகளில், முக்கியமான ஒன்று பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணியாகும். இதன் அடிப்படையில், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் கடந்த ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்டிருந்தாலும், அப்போது மக்கள் பயன்பாட்டிற்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமையே குறையாக இருந்தது. தற்போது அந்த குறைகள் நீக்கப்பட்டு, புதிய அடிப்படை வசதிகளுடன் குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

அதேபோல், செங்கல்பட்டில் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் வகையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உத்தரவிட்டுள்ளார். அந்தப் பேருந்து நிலையமும் தற்போது முழுமையாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

Verified @ RealEstate ™

மகாபலிபுரத்தில் புதிய பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஆவடியில் அதிகரித்திருக்கும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க, பயணிகளுக்கு வசதியாக புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. பெரியார் நகரில் கட்டுமானத்திற்குள்ளாக உள்ள பேருந்து நிலையமும், திருவிக நகர் தொகுதி மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மற்றொரு பேருந்து நிலையமும், செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** திருக்கரங்களால் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். முல்லைநகர், உதயசூரியன், ஆர்கே நகர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையங்கள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இவை அனைத்தும் செப்டம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

ஒட்டுமொத்தமாக ரூ.200 கோடி செலவில் 12க்கும் மேற்பட்ட MTC பேருந்து நிலையங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதில், முதன்முதலில் போக்குவரத்துத்துறைக்கு கீழ் உருவான ஆர்.கே. நகர் பேருந்து நிலையம், அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த **முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால்** தொடங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறேன். இன்று அம்பத்தூர் பேருந்து நிலையம் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** ஆட்சியில் புதிய பொலிவுடன் உருவாகி வருகிறது.

இந்தப் பணிகளை எப்போதும் ஆய்வு செய்து தொடர்ந்து முன்னேற்றம் காணச் செய்பவர்கள்: எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா அவர்களும், உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், மாநகராட்சியின் ஆணையாளர் திரு.குமரகுருபரன் அவர்களும், மண்டலத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு.நாகராஜன் மற்றும் பகுதி செயலாளர் திரு.முரளி ஆகியோருடன் ஒருங்கிணைந்து சிறுசிறு சிக்கல்களை தீர்த்து பணிகளை முன்னெடுத்து வருகிறது.

முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் திறக்கப்பட்டு 8 மாதங்கள் ஆகின்றன. அந்த நிலையம் தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எங்கள் துறையின் செயலாளர் அவர்களும், மற்றும் உறுப்பினர் செயலாளர் ஆகியோர் சட்ட ஆலோசகர்களுடன் இதை விரைவில் தீர்க்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் ஒப்புதல் அளித்து தான் முடிச்சூர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால் பின் சில காரணங்களை முன்வைத்து அவர்கள் அதை பயன்பாட்டிற்கு கொண்டு வர மறுத்துள்ளனர். இருப்பினும், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் 2 அல்லது 3 மாதங்களில் திறக்கப்பட்டவுடன் இந்த பிரச்சனைக்கும் ஒரு தீர்வு கிடைக்கும்.

கிளாம்பாக்கம் ரயில் நிலையம் தொடர்பாக, கடந்த ஆய்வு கூட்டத்தில், தென்னக ரயில்வே பொது மேலாளரிடம், எங்கள் துறையின் செயலாளர் அவர்களும் மற்றும் உறுப்பினர் செயலாளர் அவர்களும் விரைவில் பணியை நிறைவு செய்ய வேண்டுகோள் வைத்தனர். இந்த ரயில் நிலையத்திற்கான ரூ.20 கோடியையும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமே ஒதுக்கியுள்ளது. அந்த பணியும் செப்டம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

Verified RealEstate™

இந்த ஆய்வின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், திரு.கூ.பீ.ஜெயின், தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், செயற்பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, திருமதி.விஜயகுமாரி, உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப்.முரளிதரன், திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.யோகபிரியா, திருமதி.அமுதா, திருமதி.ஸ்ரீதணி, போக்குவரத்துத் துறை, சென்னை குடிநீர் வாரியம், மின்சாரத் துறை, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™